இணைப்பு: 19

## பேச்சுப்போட்டி - அதிமேற் பிரிவு

(பிறந்த திகதி: 01.07.2007 - 30.06.2010)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## தடைகளை வென்று தமிழராய் வாழ்வோம்!

எங்கள் வாழ்வில் நாம் பல்வேறு மக்களுடன் பயணிக்கின்றோம். எமது பெருமை வாய்ந்த கலாசார விழுமியங்கள் பற்றி நாம் அறிந்திருந்தாலும், இந்தப் பயணத்தில் எமது தனித்துவத்தைப் பேண முடியாது தவிக்கின்றோம்.

எம்முன்னோர் எமக்குக் கொடுத்த மிக அற்புதமான சொத்து எமது மொழியாகும். அது மொழி என்பதைத் தாண்டி எங்கள் கலாசார அடையாளத்தை உள்ளடக்கிய கருவூலமாகவும் விளங்குகின்றது. ஆயினும் அவுஸ்திரேலியா என்ற பல்லினக் கலாசார நாட்டிலே எமது கலாசாரத்தைப் பின்பற்றத் தயங்குவது ஏன்?

“நாடு ஒப்பன செய்” என்கிறார் ஔவையார். அதற்கிணங்கப் புலம்பெயர் தமிழர்கள் நாம் மேலைத்தேயக் கலாசாரத்தை உள்வாங்கி வாழ்கின்றோம். ஆனாலும் நாம் எமக்கான தனித்துவத்தை இழந்து விடக் கூடாது. எமது மொழியையும் கலாசாரத்தையும் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். ஒரு பல்லினக் கலாசாரச் சூழலில் எமது மொழியும் கலாசாரமுமே எமக்கான தனித்துவமான அடையாளங்களாக இருக்கின்றன. எமது இனத்தின் இருப்புக்கான ஆணிவேராக இருப்பவையும் அவையே. அந்த அடையாளங்களைத் தொலைத்து விடுவது என்பது எமக்கான முகத்தை இழந்து விடுவதற்கு ஒப்பானது.

பழமையும் பெருமையும் நிறைந்த ஓர் இனத்தைச் சார்ந்தவர்கள் நாம் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்மை நாமாகவே தன்னம்பிக்கையுடன் அறிமுகப்படுத்திக் கொள்ள முடியும். பல்லினக் கலாசாரச் சூழலில் வரக் கூடிய எந்தப் பிரச்சனையையும் துணிந்து எதிர் கொள்ள முடியும். புலம் பெயர் நாட்டில் தமிழின் எதிர்கால இருப்பு வருங்கால சந்ததியினராகிய எம் கைகளில்தான் உள்ளது.

தமிழ்க் கலாசாரத்தைப் பேணுவதில் உள்ள தடைகளை வெல்வோம். தமிழராய் வாழ்வோம்.

நன்றி வணக்கம்.